நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No.362/2025

## P.W.8 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மருத்துவர் பிரசாத் |
| தந்தை / கணவர் பெயர் | : | கா.முத்து |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW8 |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், 08–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.56 A.M.)

1. நான் தற்போது மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் 13.09.2020–ம் தேதியன்று பணியில் இருந்தபோது இரவு 9.45 மணியளவில் மதுவந்தி க/பெ.ரங்கசாமி

என்பவரை அவரது தாயார் சந்தரா அழைத்து வந்தார். அவரை அவரது கணவர் 13.09.2020ம் தேதியன்று இரவு 8.30 மணியளவில் அவரது வீட்டில் வைத்து கையால் தாக்கியதாக கூறினார்.

2. அவருக்கு கீழ்கண்ட காயம் இருந்தது. அவருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட சிராய்ப்பு காயங்கள் வெவ்வேறு அளவில் கழுத்தை சுற்றி இருந்தது. அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு சிகிச்சைகளும் முடிந்து 15.09.2020–ம் தேதி மாலை 5.00 மணிக்கு மருத்துவமனையில் இருந்து விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சொற்ப காயம் என்று சான்று அளித்தேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச் சான்றிதழ் என்னிடம் காட்டப்படுவதுதான். **(அந்த விபத்து பதிவேட்டு அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், காயச் சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. அ.சா.ஆ.5 விபத்து பதிவேட்டு அறிக்கையை நான்தான் எழுதி கையெழுத்து செய்தேன். மேற்படி ஆவணத்தில் சம்பவம் குறித்து நான் எழுதியுள்ள தகவல்கள் நோயாளி சொன்னதன் அடிப்படையில் மட்டும் தான் எழுதியுள்ளேன் என்றாலும் அந்த விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். நான் சொன்ன காயங்கள் தானாக தவறி விழுந்தால் கூட ஏற்படக்கூடும் என்றால் சரிதான்.

2. மருத்துவமனைக்கு இரவு 9.45 மணிக்கு நோயாளி வந்தார். நான்தான் 9.45 மணிக்கே சிகிச்சை அளித்தேன். நான் சிகிச்சை அளிப்பதற்கு எவ்வளவு நேரம் முன்பாக நான் சொன்ன காயங்கள் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் குறிப்பாக சொல்ல முடியாது. சிகிச்சைக்கு முன்பாக 24 மணி நேரத்திற்குள் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. மேற்படி காயங்களுக்கு மருந்து போட்டு சிகிச்சை அளித்தேன். கழுத்தை சுற்றியும் சிராய்ப்பு காயங்கள் இருந்தது.

3. சிராய்ப்பு காயங்கள் குறிப்பாக எந்த வகையில் தாக்கப்பட்டதால் ஏற்பட்டிருக்கும் என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. கீழே விழுவதால் கழுத்தை சுற்றி மட்டும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை. மேற்படி நோயாளி மூன்று நாட்கள் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை எடுத்தார். சொற்ப காயங்களுக்கு மூன்று நாட்கள் சிகிச்சை தேவைப்படலாம். மூன்று நாட்கள் என்னென்ன சிகிச்சை வழங்கப்பட்டது என்று சிகிச்சை குறிப்புகளை பார்த்தால் தான் தெரியும். அது பற்றியான விவரங்களை நான் காயச் சான்றிதழில் குறிப்பிடவில்லை. இது தொடர்பாக 06.10.2020–ம் தேதி என்னை போலீசார் விசாரித்தார்கள்.

4. மேற்படி நான் சொன்ன சிராய்ப்பு காயங்கள் கழுத்தை நெறிப்பதால் ஏற்பட வாய்ப்பில்லை. துணியை வைத்து இறுக்கி இருந்தால் ஏற்பட வாய்ப்பு உண்டு.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.15 P.M.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**